
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | ஆகஸ்டு 1991 | இதழ் 8



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய்<br>புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
(இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப
ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றாட்டு ஜெபம்

---

## இதழின் உள்ளே


1. அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - I 1-5
2. அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - II 6-12
3. அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - III 13-20
4. செவித்தினவு 21-25
5. வேதாகமத்தை பற்றிய உண்மைகள் 26-28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

❋ ❋ ❋

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. August—1991 Issue 8

## அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - I

1. முதலாவது முதலாம் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்டதின் நோக்கத்தைப் புரிந்து கொள்வது அவசியம்.

அ. முதலாவது இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரை எல்லா சத்தியத்துக்குள்ளும் வழி நடத்த வேண்டியதாயிருந்தது அதாவது தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்த வேண்டி இருந்தது.

1. யோவான் 14:26. எல்லாவற்றையும் போதிக்க வேண்டும்—எல்லாவற்றையும் நினைப்பூட்ட வேண்டும்.

2. ,, 16:13 சகல சத்தியத்துக்குள்ளும் நடத்துவார்—வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

3. ,, 17:17 தேவனுடைய வார்த்தையே சத்தியம்.

4. முதலாம் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலர்களை சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துவதற்காக பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார்.

ஆ. இரண்டாவதாக: **முதலாம் நூற்றாண்டில் தேவனுடைய வார்த்தைகளை உறுதிப்படுத்துவதற்காக சில குறிப்பிட்ட மனிதர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்டது.**

1. மாற்கு 16:20—அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்.

(அ) அப்போஸ்தலர்கள் அற்புத அடையாளங்கள் செய்கிறதை மக்கள் கண்டு, அவைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு தேவனுடைய வல்லமையும் அதிகாரமும் இருந்தது என்று கண்டு கொண்டார்கள்.

(ஆ) அவர்கள் சொல்வதைக் கேட்ட மக்கள் திரள் அப்போஸ்தலர்களும் மற்ற ஆவியினால் ஏவப்பட்டவர்களும் தேவனுடைய வார்த்தையை - தங்களுடைய வார்த்தையல்ல போதித்தார்கள் என்று - நம்பினார்கள்.

2. அப் 2:22 இயேசுகிறிஸ்து செய்த அற்புத அடையாளங்களை தேவன் அங்கீகரித்தார்.

**(இ) இப்பொழுது கேட்கத் தகுந்த ஒரு கேள்வி எப்பொழுது தேவனுடைய வார்த்தை வெளிப்படுத்தப் பட்டு உறுதி செய்யப்பட்டது?**

1. முதலாம் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தைக் கொடுப்பது தேவனுடைய நோக்கமாயிருந்தது என்று பார்த்தோம்.

2. அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தின் தேவை பூர்த்தியானபிறகு அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைக் கொடுப்பதை தேவன் நிறுத்திக் கொண்டார்.

3. அப்படிச் செய்வேன் என்று சொல்லியுமிருக்கிறார்.

(அ) 1கொரி 13:8-10.

1. .. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோகும்; அறிவானாலும் (அற்புத அடையாளங்கள் செய்யும்) ஒழிந்துபோம். (வ8)

2. இந்த வசனங்களை எழுதினபொழுது அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தை உபயோகித்து புதிய ஏற்பாட்டை எழுதினார்.

3. பவுலும் மற்ற ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்களும், புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளை மட்டும் அறிந்து

முன்னுரைத்தார்கள். பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு தேவன் அவர்களுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப் படுத்தினார் (வ 9)

4) இப்படியாக, முழுமையடையாமல் இருந்த புதிய ஏற்பாட்டு நூல்களை நிறைவு செய்ய அற்புத அடையாளம் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தை தேவன் பயன்படுத்தினார்.

5) பத்தாம் வசனத்தில் நிறைவாக இருப்பதற்கும், குறைவாக இருப்பதற்கும் உள்ள வித்தியாசத்தைச் சுட்டிக் காட்டுகிறார்.

6) நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும் என்கிறார்.

7) நிறைவு என்று இங்கே கூறப்படுவதற்கு மூல மொழியாகிய கிரேக்கத்தின் பிரகாரம் முழுமை, ஒரு தொடர் செயல்பாட்டின்இறுதி நிலை என்று பொருள் கொள்ளலாம்.

8) ஆகையால் நிறைவானது வரும் பொழுது குறைவானது ஒழிந்து போகும் என்று சொன்னபோது இந்தக் கருத்தில் தான் சொன்னார்.

9) நாம் ஏற்கனவே பார்த்த மாதிரி, நிறைவு பெறாமல் இருந்த புதிய ஏற்பாட்டை நிறைவு செய்ய அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தை தேவன் பயன்படுத்தினார்.

10) இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது நிறைவானது வரும்போது என்று சொன்னது புதிய ஏற்பாடு பூரணப்பட்டதையே குறிக்கும்.

11) ஆக புதிய ஏற்பாட்டை முழுவதுமாக எழுதி முடித்த பொழுது அதில் குறையாய் இருந்தவைகளை நிறைவு செய்தார் என்று கொள்ளலாம்.

12) இப்படியாக புதிய ஏற்பாட்டை முழுமைப்படுத்த உபயோகமாக இருந்த அந்நிய பாஷை, தீர்க்கதரிசனம் அற்புதங்களை செய்யும் அறிவு ஆகிய பரிசுத்த ஆவியின் வரங்கள் இனித்தேவையில்லை என்று நிறுத்திக் கொண்டார்.

13) சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் முழு மனிதனாக, மனுஷியாக முழுத் தாவரமாக, முழு மிருகமாக எல்லாவற்றையும் பூரண வளர்ச்சியுடையதால் படைத்த தேவன் உடனே

அடுத்த தலைமுறையை இயற்கைச் சட்டத்துக்கு ஒப்புக் கொடுத்து விட்டார் என்பதைக் கவனி? (ஆதியாகமம்)

14) நாற்பது ஆண்டு காலம் இஸ்ரவேல் மக்களை மன்னாவினால் போஷித்த தேவன் கானான் தேசத்துக்குள் பிரவேசித்து முதல் அறுவடை செய்ததும் மன்னாவை நிறுத்தி இயற்கைச் சட்டத்துக்கு ஒப்புக் கொடுத்தார்.

(யோசவா 5:12)

3. ஆ நிறைவு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டிருப்பது முழுமையாய் வெளிப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடு தான் என்கிற உண்மையை கீழ்க்காணும் வசனங்களின் மூலமாகவும் அறியலாம்.

1) யாக் 1:25 புதிய ஏற்பாட்டைத்தான் சுய தீனப்பிரமாணமாகிய பூரண பிரமாணம் என்கிறது.

4. தேவன் தாம் செய்ய விரும்பியபடி முதலாம் நூற்றாண்டிலேயே புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்தி அதை உறுதி செய்ததின் மூலம் தான் மனுக்குலத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று இருந்தவைகளை வெளிப்படுத்தி உறுதி செய்து விட்டேன் என்கிறார். எடுத்துக்காட்டுக்கு கீழ்வரும் வசனங்களைக் கவனியுங்கள்.

அ) எபி 2:3,4 - தேவன், இயேசுகிறிஸ்து மூலமாய் அறிவிக்கப்பட்ட பின்னர் அதைக் கேட்டவர்களாலே உறுதி செய்யப்பட்டு பெரிய இரட்சிப்பை புதிய ஏற்பாடு தான் வெளிப்படுத்திற்று என்கிறார்.

ஆ) யூதா 3ம் நிரூபம் 3-ம் வசனத்தில் எழுதப்பட்ட முதலாம் நூற்றாண்டில், விசுவாசமாகிய நற்செய்தி பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை வெளிப்படுத்தப்பட்டது என்கிறார்.

இ) 2பேதுரு 1:3 அவரை அறிகிற அறிவினால் ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் நமக்குத் தந்தருளினார். என்கிறார்.

ஈ) மேற்கூறிய வசனங்கள், தேவன் மனுக்குலத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று இருந்த எல்லாவற்றையும் முதலாம் நூற்றாண்டிலேயே வெளிப்படுத்தி அதை உறுதி செய்து விட்டார் என்று கூறுகின்றன.

5) முதலாம் நூற்றாண்டில் தேவன் நமக்குப் புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தி உறுதி செய்து கொடுத்திருக்கிற

சத்தியங்களைத் தவிர ஒன்றையும் கூட்டவும் வேண்டாம் குறைக்கவும் வேண்டாம் என்று கட்டளையிட்டிருக்கிறார்.

(அ) கலா 1:6-9

(ஆ) வெளி 22:18,19

6) இப்படியாக அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தின் தேவை முதலாம் நூற்றாண்டில் முடிந்து விட்டது.

7) அற்புத அடையாளங்கள் நின்று போயின. ஏனெனில் தேவன் அவைகளைப் பயன்படுத்திச் செய்ய நினைத்த வேலை முடிந்து விட்டது. இதற்கு தேவனால் இந்த நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்ய வல்லமை இல்லை என்று பொருள் அல்ல. தேவனால் எல்லாம் கூடும். மத் 19:26 ஆனால் என்ன செய்யவேண்டும் என்று அவருக்கு ஆலோசனை தருவதற்கு தேவன் எம்மாத்திரம்?

## 28ம்-பக்கத் தொடர்ச்சி

ருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்கு (மோசேயின் சட்டம்) கீழானவர்கள் அல்லவே. நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே.''

— கலா 3:23-36.

ஈ. ''நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப்பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.''

— கலா 5:4.

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்கவும்

# அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - II

**அற்புத அடையாளம் செய்யும் பரிசுத்த ஆவியின் வரங்கள் முதலாம் நூற்றாண்டோடு முடிவு பெற்று விட்டது என்று அறிந்து கொள்ள இன்னும் கூட ஒரு வழி இருக்கிறது. தேவன் இரண்டு வழிகளில் தான் இந்த அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வேதாகத்தில் சொல்லியிருக்கிறார்.**

முதலாவது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு மூலமாக இந்த வாக்குத்தத்தம் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது.

(அ) அப் 1:2,5 — இயேசு அப்போஸ்தலர்களிடம், ''நீங்கள் சில நாட்களுக்குள்ளே பரிசுத்த, ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்'' என்றார்.

(ஆ) அப் 1-8 — ''பரிசுத்த ஆவி உங்களிடததில் வரும் போது நீங்கள் பெலனடைவீர்கள்'' என்று வாக்குக் கொடுத்தார்.

(இ) 2:1-4 — இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மீது பரிசுத்த ஆவி வந்த பொழுது அவர்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளிலே பேசும் படி வரம் கொடுத்தார்.

(ஈ) 2:14 முதல் வாசிக்க — பரிசுத்த ஆவியின் ஏவுதலால் தேவனுடைய வார்த்தையைப் பேச ஆரம்பித்தார்கள்.

2. புதிய ஏற்பாடு முழுவதிலும் பார்த்தால் இவ்விதமான பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் வேறு ஒரே ஒரு முறைதான் மறுபடியும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(அ) அப் 10:44-46 — புறஜாதியானான கொர்நெலியும் அவனுடைய வீட்டாரும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.

(ஆ) அப் 11:17,18 — இந்த இரண்டாம் முறை பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கொர்நெலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் கொடுத்ததின் மூலம் யூதமக்கள் மட்டுமல்ல புற ஜாதியாரும் இரட்சிப்புக்குப் பாத்திரவான்களே என்று காண்பிப்பது தேவனுடைய நோக்கம்.

(இ) அப் 11:15 கொர்நெலியு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றதை, அவர்மீதும், மற்ற அப்போஸ்தலர்கள்மீதும் பரிசுத்த ஆவி வந்திறங்கினதற்கு சமமாக்குகிறார். (அப் 2:1-4)

(ஈ) சில பேர் கூறுவது போல பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் சாதாரணமாக எல்லாருக்கும் கொடுக்கப்படுவது தான் என்பது உண்மையானால், ஏன் பேதுரு சபை ஆரம்பிக்கப்பட்ட நாளில் தங்களுக்கு நேர்ந்த அனுபவத்தை இவ்வளவு காலத்திற்குப் பிறகு சுட்டிக் காட்ட வேண்டும்?

(உ) பெந்தேகோஸ்தே நாளில் தனக்கும் மற்ற அப்போஸ்தலருக்கும் ஏற்பட்டதை நினைவு கூர்ந்து சொல்வதற்குப் பதிலாக, ஏன் சமீபத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டக் கூடாது? ஏனெனில் அப்படி வேறொரு நிகழ்ச்சி நடைபெறவில்லை.

(ஊ) இவைகளெல்லாம் சிந்தித்துப் பார்க்கும்போது முதலாம் நூற்றாண்டிலே கூட இரண்டே இரண்டுமுறை தான் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. அந்நாட்களில் அற்புத அடையாளங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த காலம்.

(எ) இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நடந்ததற்கு தேவனுடைய மிகச் சிறப்பான, ஒப்புவமையற்ற நோக்கம் இருந்தது.

1. அப்போஸ்தலர்கள் விஷயத்தில், தேவனுடைய வார்த்தையை பிழையில்லாமல் வெளிப்படுத்தி புதிய ஏற்பாட்டை எழுதுவது ஒரு நோக்கம்.

2. கொர்நெலியு மற்றும் அவனுடைய வீட்டார் விஷயத்தில்; இதுவரை இரட்சிப்புக்கு அருகதையில்லாதிருந்த புறஜாதிகளும் சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு, நித்திய ஜீவனுக்கு வழி நடத்தும் இரட்சிப்பின் செய்திக்கு மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தால் அவர்களையும் தேவன் ஏற்றுக்கொள்வார் என்பதைத் தெளிவுபடுத்துவது மற்றொரு நோக்கம் (அப் 17:30)

3. பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கட்டளையல்ல என்பதை நினைவில் வையுங்கள்.

(அ) அது ஓர் வாக்குத்தத்தமே.

(ஆ) இயேசு கிறிஸ்து மட்டுமே அதைக் கொடுக்கிறவர். மத் 3:11

(இ) மனிதர்களில் எவருமே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு கொடுத்தாக வேதாகமத்தில் ஆதாரமில்லை.

(ஈ) கி.பி. 62 வாக்கில் எழுதப்பட்ட எபேசியர் நிருபத்தில் தேவன் பவுல் மூலமாக ஒரே ஞானஸ்நானம் என்று எழுதியிருக்கிறார் (எபே 4:5)

1. மத் 28:19 அந்த ஒரு ஞானஸ்நானம் இயேசுவின் சீஷர்களால் கொடுக்கப்பட்டது; **இயேசுவினால் அல்ல.**

2. மத் 28:20 அந்த ஒரு ஞானஸ்நானம் உலகின் முடிவு பரியந்தம் இருக்க வேண்டியது.

3. அப் 10:47,48.

(அ) அந்த ஒரு ஞானஸ்நானம் கட்டளையிடப்பட்ட ஒன்று; அது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதல்ல.

(ஆ) அந்த ஒரு ஞானஸ்நானம் **தண்ணீர்** ஞானஸ்நானமே? பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமல்ல.

(இ) கொர்நெலியும் அவனது வீட்டாரும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றிருந்தாலும் தண்ணீர் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று கட்டளையிடப்பட்டனர் (அப் 10;48)

4. அப் 11:24

(அ) கொர்நெலியுவையும் அவன் வீட்டாரையும் தண்ணீரில் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கட்டளையிட்ட பொழுது நீயும் உன் வீட்டார் அனைவரும் இரட்சிக்கப்படுவதற்கேதுவான வார்த்தைகளை அவன் உனக்கு சொல்லுவான் என்கிற வாசகங்களைக் கவனியுங்கள். (வ.14)

(ஆ) ஆகவே **தண்ணீர் ஞானஸ்நானம் தான்** நம்முடைய பாவங்களைப் போக்கி நம்மை இரட்சிப்பதற்குத் தேவையானது என்பது விளங்குகிறதல்லவா?

5. அப் 2:38, 41,47 அந்த ஒரு தண்ணீர் ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கும் இரட்சிக்கப்படுவதற்கும், கர்த்தருடைய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கும் அவசியம்

6. அப் 22:16 பாவங்களைக் கழுவிப்போட அந்தத் தண்ணீர் ஞானஸ்நானம் தேவை.

7. 1பேதுரு 3:20,21 — அந்தத் தண்ணீர் ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது.

8. கலா. 3:26,27 — அந்தத் தண்ணீர் ஞானஸ்நானம் நாம் தேவனுடைய பிள்ளையாக நம்மை மாற்றி கிறிஸ்துவோடு சேர்க்கிறது.

4. ஆகவே அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் தேவனால் ஒரு நோக்கத்துக்காக கொடுக்கப்பட்டதென்றும் அப் 10ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளபடி ஒரு மிகச் சிறப்பான ஒப்புவமையற்ற நோக்கத்துக்காக கொர்நெலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் கொடுக்கப்பட்டது. அது மறுபடியும் வேறொருவருக்கும் கொடுக்கப்படவில்லை என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறதல்லவா?

5. ஆகவே இன்றைக்கு உயிரோடிருக்கிற எவருக்கும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலம் அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் கொடுக்கப்படவில்லை.

6. இன்று தேவனால் கட்டளையிடப்பட்டது தண்ணீர் ஞானஸ்நானம் ஒன்று மட்டுமே. அதுவே நமக்குப் பாவ மன்னிப்பு அளிக்கிறது.

7. இவ்வளவு நன்மைகளும் ஆசீர்வாதங்களும் தண்ணீர் ஞானஸ்நானத்தில் இருக்கிறது என்று வேதம் தெளிவாகக் கூறியிருந்தபோதிலும், அதை வேதாகம முறைப்படி பெற்றுக் கொள்ள முன்வராத மக்கள் நமக்கு சம்பந்தமில்லாத தேவன் கட்டளையிடாத பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளத் துடிப்பது ஏன்? சாத்தானின் வஞ்சிக்கும் திறமையை நாம் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை, கிறிஸ்தவர்களே உஷார்! கொஞ்சம் சிந்தித்துப் பழகுங்கள் காலம் சம்பித்து விட்டது.

B. அப்போஸ்தலர்கள் தவிர அற்புத அடையாளம் செய்யக் கூடிய பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றவர்களே இல்லையா? கொஞ்சம் பேர் முதலாம் நூற்றாண்டில் இருந்தார்கள். அவர்கள்மீது அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து அந்த வரத்தைக் கொடுத்தார்கள்.

1. அப் 6:5,6,8.

(அ) இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் ஸ்தேவான், பிலிப்பு உட்பட ஏழு நபர்களின் மீது கை வைத்து அந்த வரத்தைக் கொடுத்தார்கள்.

(பரிசுத்த ஆவியில் நிறைந்து என்பது பரிசுத்த ஆவியின் திருமுழுக்கல்ல)

(ஆ) அதற்குப் பிறகு அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைப் பெற்று மக்களுக்குள்ளே அற்புத அடையாளங்கள் செய்தார்கள்.

(இ) இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் தவிர மற்றவர்கள் அற்புத அடையாளங்கள் செய்தார்கள் என்பதற்கு இதுவே முதல் நிகழ்ச்சி.

(ஈ) ஸ்தேவான் அற்புத அடையாளம் செய்ய முடிந்ததற்கு அப்போஸ்தலர்கள் கைகள் வைத்தால் அந்த வல்லமை அவருக்கு கிடைத்தது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய காரியம்.

2. அப் 8:5,6. அதே போன்றுதான் பிலிப்பு என்பவரும் அற்புத அடையாளங்கள் செய்தார்.

3. அப் 8:14—18.

(அ) பிலிப்பு அற்புத அடையாளங்கள் செய்த போதிலும் ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக பேதுருவும் யோவானும் சமாரியாவுக்கு வரவேண்டியிருந்தது.

(ஆ) சமாரியாவில் உள்ளவர்களும் அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதின் மூலமாக பரிசுத்த ஆவியைப் பெற்று அவர்களும் அற்புத அடையாளங்கள் செய்யட்டும் என்பதற்காகத்தான் அவர்கள் வரவழைக்கப்பட்டார்கள்.

(இ) அப்போஸ்தலர்கள் சமாரியர்கள் மீது கை வைத்த பொழுது அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொண்டார்கள்.

(ஈ) அப்போஸ்தலர்கள் கை வைப்பதின் மூலமாக பரிசுத்த ஆவி கொடுக்கப்படுகிறதையும் அதன் மூலமாக அற்புத அடையாளங்கள் செய்யமுடியும் என்பதையும் சீமோன் கண்டான்.

உ) இப்படிப் பிலிப்பு அற்புத அடையாளங்கள் செய்ய முடிந்தாலும் அற்புத அடையாளங்கள் செய்யும் அதிகாரத்தை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியவில்லை ஏனெனில் அவன் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலன் அல்ல.

ஊ) பிலிப்பு எந்த ஊரிலே அற்புத அடையாளங்கள் செய்தாரோ அதே ஊரில் உள்ள மற்றவர்களுக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தைக் கொடுக்க அப்போஸ்தலர்கள் நேரடியாக வரவேண்டியிருந்தது.

4. 2தீமோ 1:6 இளைஞன் தீமோத்தேயுவில் இருந்த சில வரங்கள் அப்போஸ்தலன் பவுல் அவன்மீது கை வைத்ததினால் உண்டானது.

5. இன்றைக்கு இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் யாரும் நம்மிடையே இல்லை,

அ) அப் 1:21-26 ஒருவன் இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாயிருப்பதற்கு சில தகுதி கொடுத்திருக்கிறார்,

ஆ) இன்றைக்கு உயிரோடிருக்கிற யாருமே அந்த தகுதிகளையுடையவராக இருக்க முடியாது)

இ) ஆகவே இன்றைக்கு இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் நம்மிடையே இருப்பதற்கு எவ்வித வாய்ப்பும் இல்லை.

ஈ) கடைசி அப்போஸ்தலன் மரித்தபிறகு பிறர்மீது கை வைத்து அற்புத அடையாளம் செய்யும் வல்லமையைக் கொடுப்பவர்களும் கிடையாது.

உ) ஏறக்குறைய கி.பி. 100ல், கடைசி அப்போஸ்தலனும் மரித்துப்போன பிறகு, முதலாம் நூற்றாண்டோடு மற்றவர்கள் மீது கை வைத்து அற்புத அடையாளங்கள் செய்யும் வரமும் நின்று போயிற்று.

ஊ) கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கைவைத்ததினால் அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் பெற்றவர்களும் மரித்த பிறகு அற்புத அடையாளங்கள் செய்யும்பரிசுதத ஆவியின் வரமும் நினிறு போயிற்று.

6. ஆகையால் அப்போஸ்தலர்கள் கைகளை வைப்பதின் மூலமாக அற்புத அடையாளங்கள் செய்கிற வரம் இன்றைக்குக் கிடையாது என்பது தான் ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலை.

C. முடிவாக முதலாம் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யக் கூடிய பரிசுத்த ஆவியின் வரம் இரண்டு விதமான முறைகளின் மூலமாகத்தான் கொடுக்கப்பட்டது.

1) பரிசுத்த ஆவியின் திருமுழுக்குப் பெற்றுக் கொள்வதின் மூலம்,

2) இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கை வைப்பதின் மூலம்.

3) வேதாகமத்தின் துணை கொண்டு பார்த்ததில் இந்த இரண்டு காரியங்களுமே இன்றைக்கு நடைமுறையில் இல்லை ஆகவே இன்று அந்த அற்புத அடையாளங்கள் செய்யக் கூடிய வரத்தைப் பெற்றுக்கொள்ள வழியில்லை.

4) ஆக தேவனுடைய சித்தத்தின்படி இன்றைக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் வரம் கிடையாது.

D. ஒன்று இலக்கமிட்டவைகளில் நாம பார்த்த காரியங்களின் தொகுப்பாக புதிய ஏற்பாடு எழுதப்பட்டு உறுதி செய்யப்பட்ட கையோடு அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த

ஆவியின் வரங்களும் நின்று போயிற்று என்று தேவன் சொல்லு கிறார் இந்த காரியங்கள் முதலாம் நூற்றாண்டில் இறுதியில் முழுமையடைந்து விட்டது.

E இரண்டு இலக்கமிட்டவைகளில் நாம் பார்த்த காரியங்களின் தொகுப்பாக அற்புத அடையாளங்கள் செய்வதற்கு இரண்டு வழிகள் ஒன்று பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு 2) அப்போஸ் தலர்கள் பிறர் மீது கை வைத்தல்.

1. அந்த இரண்டுமுறைகளும் முதலாம் நூற்றாண்டில் இறுதியில் ஓர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

2. அற்புத அடையாளங்கள் செய்ய வேண்டியதின் நோக்கத்தை நிறைவு செய்தார்.

3. அவர் அற்புத அடையாளங்கள் செய்யும் இரண்டு விதமான முறைகளையும் நிறுத்திப் போட்டார்.

4. இந்த இரண்டு முறைகளையும் ஒரே நேரத்தில் முடிவுக்குக் கொண்டு வந்தார்.

5. முரண்பாடில்லாமல் இரண்டு பகுதிகளிலும் நாம் படித்த காரியங்கள் கர்த்தருடைய உபதேசத்துக்கு எவ்வாறு இணக்கமாகஉள்ளது என்று பாருங்கள்.

F. இந்த அற்புத அடையாளங்கள் முதல் நூற்றாண்டோடு முற்றுப் பெற்று விட்டது என்று புரிந்துகொள்வதற்கு இன்னும் கூட ஒரு வழி இருக்கிறது.

G. அதை நமது மூன்றாவது பகுதியில் படிக்கலாம்.

28ம் பக்கத் தொடர்ச்சி

**வேதாகமத்தின் பரிசுத்தமான போதனைகளில் தலையிட்டு குழப்பக்கூடாது.**

1. வேதாகமத்தில் எதையும் நாம் சேர்க்கவோ, அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ கூடாது.
— வெளி. 22:18-19.

2. அதன் போதனைகளைத் திரித்துக் கூறுபவர்கள் சபிக்கப்பட்டவர்கள். — கலா. 1:6—9.

3. கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. — 2 யோவான் 9.

4. ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்க வேண்டும், — 1 பேதுரு 4:11.

பரிசுத்தவான்கள் அல்லது கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து சபை கூடி வருவதை உதாசீனம் செய்யக்கூடாது.

(எபி.10:25)

**ஜேம்ஸ் எல். டென்னிசன்** **எஸ். எஸ். ராஜன்.**

# அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் - III

**அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் ஒய்ந்து போயிற்று என்பதை இயேசுகிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலர்களும் செய்த அடையாளங்களோடு தற்கால அற்புத அடையாளங்கள் செய்பவர்களின் கிரியைகளோடு ஒப்பிட்டுப் பார்த்து கண்டு கொள்ளலாம்.**

முதலாவது அற்புத அடையாளங்கள் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

1. இன்றைக்கு அற்புத அடையாளங்கள் என்ற வார்த்தை பல வகைகளிலும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது, ஒரு தேர்விலே வெற்றி பெறுவது ஒரு வேலையைக் கண்டுபிடிப்பது உட்பட பல அற்ப காரியங்களுக்கும் உபயோகிக்கப்படுகிறது.

2. வேதாகமத்தின்படி அந்த வார்த்தைக்கு அர்த்தம் அப்படியல்ல. அகராதியிலும் அதற்கு அர்த்தம் அதுவல்ல.

3. ''மிராக்கிள்'' என்ற ஆங்கில வார்த்தைக்கு புகழ்பெற்ற வெப்ஸ்டர் அகராதி சொல்லுகிற அர்த்தம் பின்வருமாறு:

   (அ) தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக இயற்கை விதிகளை மீறி நடைபெறும் ஒரு அசாதாரண சம்பவம் என்கிறது.

   (ஆ) உலகத்தை ஆளுகின்ற இயற்கைச் சட்டங்களிலிருந்து விலகி நடைபெறுகிற ஒரு அற்புத நிகழ்ச்சி அல்லது ஒரு விளைவு என்கிறது.

4. இந்த இரண்டு கருத்துக்களையும் இணைத்துப் பார்ப்போமானால் ''மிராக்கிள்'' என்கிற அற்புத அடையாளங்கள் என்பது இயற்கைச் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு மனித சக்திக்கு அப்பாற்பட்ட தேவனுடைய வல்லமையினால் நடைபெறும். ஒருஅசாதாரண நிகழ்ச்சி என்று பொருள்படும். வேறு விதமாகச் சொல்வோமானால் அற்புத அடையாளங்கள் என்பது இயற்கைச் சட்டங்களை நிறுத்தி வைத்து அல்லது மாற்றி தேவனுடைய சிறப்பு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடைபெறுகிற ஒரு வியத்தகு செயல் என்று சொல்லாம்.

5 இந்த விளக்கம் வேதாகமத்தில் நாம் பார்க்கிற அற்புத அடையாளங்களுக்குப் பொருந்தி வருகிறதை நாம் கவனிப்போம். மேற்படி விளக்கங்களை மனதில் கொண்டு இயேசுகிறிஸ்துவாலும், அவருடைய அப்போஸ்தலர்களாலும் முதலாம் நூற்றாண்டில் எப்படிப்பட்ட அற்புத அடையாளங்கள் செய்யப்பட்டன என்று தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்தில் பார்ப்போம் முதலாம் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் இருந்தது

1. மாற்கு 16:17,18. பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள் (முந்தி ஒரு போதும் கற்றறியாத மொழி) சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்குவார்கள்.

2. யோவான் 11:39-44 லாசரு **மரித்து நான்கு நாட்களுக்குப் பிறகு** இயேசு அவனை உயிரோடே எழுப்பினார்.

3. அப் 9:36-42 பேதுரு தபீத்தாள் என்னும் தொற்காளை உயிரோடே எழுப்பினார்.

4. அப் 20:9-12 பவுல் ஐத்திகு என்ற வாலிபனை உயிரோடே எழுப்பினார்.

5. அப் 28:3-6 பவுலை ஒரு கொடிய விரியின் பாம்பு கடித்து விட்டது ஆனால் ஒரு சேதமும் ஏற்படவில்லை.

6. 2:4-11

(அ) இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றார்கள். 120 பேர் அல்ல

(ஆ) வேறு பல அற்புதங்களோடு அந்நிய மொழியிலே பேசுகிற அற்புத வரத்தையும் பெற்றார்கள்.

1) அந்நிய மொழியில் பேசுவது என்றால் என்ன என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்வது அவசியம்.

2) முதலாவது அந்நிய மொழி என்பதற்கு மூல மொழியாகிய கிரேக்க மொழியில் என்ன சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்.

(அ) W.E. 'வைன்' என்ற அறிஞர், ஒரு மொழியை முன் பின் கற்றுக் கொள்ளாமல் அற்புதவிதமாக அந்த மொழியில் பேசுதல் என்று சொல்லுகிறார்.

(ஆ) J.H. தாயர் என்ற பண்மொழி அறிஞர், ஒரு நபர் முன்பின் தெரியாத ஒரு புது மொழியில் பேசுவது என்கிறார்.

(இ) இந்த இரண்டு கருத்தையும் இணைத்துப் பார்க்கும் போது அந்நிய மொழி என்பது அற்புதமான முறையில் தான் கற்றறி-யாத ஒரு புதிய மொழியில் இலக்கண சுத்தமாகப் பேசுவது என்று பொருள்.

C. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்துவின் அப்-போஸ்தலர்கள் அந்நிய மொழியில் பேசினதை இந்த விளக்கங்-களின் வெளிச்சத்தில் சோதித்துப் பார்ப்போம்.

1). வ.4. பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களுக்கு அந்நிய பாஷையில் பேசும் வல்லமையைக் கொடுத்தார்.

2) வ.5. வானத்தின் கீழ் உள்ள **சகல தேசத்தாரிலிமிருந்து வந்த** தேவபக்தியுள்ள மனிதர்கள் கூடி வந்திருந்தார்கள்.

3) வ.6. திரளான ஜனங்கள் கூடி வந்து தங்கள் தங்கள் **மொழி-களிலே** அவர்கள் பேசுகிறதைக் கண்டு கலக்கமடைந்தார்கள்.

4) வ:7,8,. ஒருவரை ஒருவர் பார்த்து, இதோ பேசுகிற இவர்-கள் எல்லாரும் கலிலேயரல்லவா? நம்மில் அவரவர்களுடைய **ஜென்ம பாஷைகளிலே** இவர்கள் பேசக் கேட்கிறோமே.

5) வ.9-11 பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த அந்த மக்கள் தங்கள் தங்கள் ஜென்ம பாஷைகளிலே **தேவனுடைய மகத்-துவத்தை** அவர்கள் பேசக் கேட்கிறோமே என்று பிரமித்-தார்கள்.

D. இப்படியாக அற்புத அடையாளங்கள் செய்யக்கூடிய பரிசுத்த ஆவியின் வரத்தினாலே முந்தி ஒருபோதும் கற்றறியாத பாஷை யில் பேச முடியும் என்று படித்தோம் இதை நாம் பல கோ-ணங்களில் ஆராய்ந்தோம்.

1. மொழிகள் என்ற சொல்லின் மூல மொழியாகிய கிரேக்க மொழியில் அதற்கு என்ன விளக்கம் என்று பார்த்தோம்.

2. அப்போஸ்தலர் 2-ம் அதிகாரத்தில் கண்டுள்ளபடி அப்போஸ்-தலர்தாங்கள் முன்பொரு போதும் கற்றறிருந்திராத மொழி களில் பேசும் வல்லமையைப் பெற்றிருந்தார்கள் என்று பார்த் தோம்.

E. இந்த இரண்டு சம்பவங்களிலும், முதலாம் நூற்றாண்டில் முன் னொருபோதும் படித்திராத ஒரு மொழியில், அற்புத அடை-யாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தின் உதவி-யினால் பேச முடியும் என்று பார்த்தோம்.

F. இப்பொழுது நாம் என்ன செய்யலாம் என்றால் பரிசுத்த வேதாகமத்தில் செய்ததாகச் சொல்லப்பட்டுள்ள அற்புத அடையாளங்களுக்கும் நவீன கால அற்புத அடையாளங்கள் செய்வதாகச் சொல்லுகிற இரண்டையும் ஒத்திட்டுப் பார்க்கலாம்.

1. அப்படிச் சோதித்துப் பார்ப்பது தவறல்ல "உலகத்திலே அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" என்கிறது 1 யோவான் 4:1.

2. இன்றைக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்தாவியின் வரத்தைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்பவர்கள் **முதலாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட அற்புத அடையாளங்களைப் போல** செய்ய வேண்டும் அல்லவா?

3. அப்படி அவர்களால் **செய்யமுடியாமற்போனால்** அவர்கள் சொல்வது பொய். அந்த ஆவிகள் தேவனிடத்திலிருந்து வந்தவைகள் அல்ல. அவைகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

4. முதலாவது இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் வியத்தகு அற்புதங்களைச் செய்தார்கள் என்பதை அவர்களுடைய பரம எதிரிகளும் மறுக்க முடியவில்லையே!

அ. அப் 4:1-16.

1. 4: 1-6-(அப் 3:1-10 ல்) ஒருப்பிறவி முடவனைக் குணமாக்கினபடியால் சினமடைந்த யூத மதத் தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் சிறைச்சாலையில் அடைத்தார்கள்.

2. வ.7. நீங்கள் எந்த வல்லமையினால் எந்த நாமத்தினால் இந்த பிறவி முடவனை சொஸ்தமாக்கினீர்கள் என்று கேட்கிறார்கள்.

3. வ.14 சொஸ்தமாக்கப்பட்ட மனுஷன் அவர்கள் அருகே நிற்கிறதைக் கண்டபடியால் எதிர்பேச அவர்களுக்கு இடமில்லாதிருந்தது.

4. வ.16. **எருசலேமில் வாசம் பண்ணுகிற எல்லாருக்கும்** தெரிந்திருக்கிறபடி வெளியரங்கமான அற்புதம் இவர்களால் செய்யப்பட்டதே. **அதை நாம் இல்லை என்று சொல்லக் கூடாது**, என்கிறார்கள் அந்த யூத மதத் தலைவர்கள்.

5. கிறிஸ்தவத்தின் எதிரிகள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் செய்த அற்புதங்களை மறைக்கவும், மறுக்கவும் முயன்றாலும் அவைகள் வியத்தக்கவைகளாகவும் எல்லா மனுஷராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாயும் இருந்தபடியால் அவைகளை ஏற்றுக்கொள்வதைத் தவிர மறுப்பதற்கு வழியில்லை.

b. இது தற்கால அற்புத அடையாளம் செய்கிறவர்களின் செயல் பாட்டுக்கு முற்றிலும் மாறுபட்டது.

1. இவர்கள் செய்கிறதாகச் சொல்லுகிற அற்புத அடையாளங்கள் மெய்யென்று சொல்வதற்கு நம்பகமான சாட்சிகள் கிடையாது. அப்படியிருக்க எதிரிகளா சொல்லப் போகிறார்கள்?

2. அற்புத அடையாளங்கள் செய்யும் வல்லமை எங்களுக்கு உண்டு என்று சொல்லுபவர்களில் பெரும்பான்மையோர் போலிகள், ஏமாற்றுக்காரர்கள். (தயவு செய்து மன்னிக்கவும்)

3. அடுத்து, வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள அற்புத அடையாளங்கள். உடனடி நிவாரணம் கொடுக்கும் தன்மையுள்ளவைகளாய் இருந்தன. எடுத்துக்காட்டாக சில நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

a. அப் 3:1—10.

1. வ.1,2. பேதுருவும் யோவானும், தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு பிறவி முடவனைக் கண்டார்கள். அவனை **தினந்தோறும்** தேவாலயத்தின் வாசலருகே கொண்டு வந்து வைப்பார்கள்.

2. வ. 3—5.

அ. பேதுருவும், யோவானும் தனக்கு சுகம் கொடுப்பார்கள் என்கிற பெரிய விசுவாசம் ஒன்றும் அவனுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. அவன் பேதுருவிடமும் யோவானிடமும் பிச்சைதான் கேட்டான். (ஆ) அதாவது **வயிற்றுத் தேவைகளுக்காகத்தான்** அவர்களை நோக்கிப் பார்த்தான்.

3. வ.6. பேதுரு அவனிடம் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நீ எழுந்து நட என்றான்.

4. வ.7. **உடனே** அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டது.

5. வ.8. உடனே **அவன் குதித்து எழுந்து நின்று நடந்தான்** தேவனைத் துதித்தான்.

6. வ.9,10. மக்கள் அந்த முடவனை அறிந்திருந்தார்கள். அவன் யார் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. அவனுக்குச் செய்யப்பட்ட அற்புதம். அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

b. மறுபடியும் பாருங்கள். இன்று நடைபெறுகிற அற்புத அடையாளங்களின் இலட்சணம் என்ன என்று.

1. அற்புத அடையாளங்கள் செய்கிறேன் என்று பிதற்றித் திரி-கிற போலிகள் இப்படி உடனடி நிவாரணம் கொடுக்கக்கூடிய அற்புதங்களை எங்காவது, எப்பொழுதாவது செய்திருக்கிறார் களா?

2. அவர்கள் தங்களிடம் நம்பிக்கையோடும், ஆவலோடும் வருகிற மக்களிடம் நீங்கள் போய் வீட்டில் உபவாசம் இருங்கள். தேவன் எங்கள் தலைமைப் போதகருக்கு தரிசனமாகி தீர்க்கத்தரிசனம் உரைப்பார். அதுவரை எங்கள் ஆலயத்துக்கு வாருங்கள் தசம பாகம் கொடுங்கள். நகை நட்டுக்கள் இருந்தால் கழட்டி பாஸ்-டரிடம் கொடுத்து விடுங்கள் என்பர்.

3. உங்களுக்குப் போதிய விசுவாசம் இல்லை என்று வந்தவர்கள் மேல் பழியைப் போடுவார்கள்.

அ. நாம் பார்த்தோமே அந்த பிறவி முடவன் அவனுக்கு ஒன்றும் சுகமாவேன். என்று விசுவாசம் இருக்கவில்லையே. அவன் ஏதாவது வயிற்றுப்பாட்டுக்கு கொஞ்சம் சில்லறை கிடைக்கு-மோ என்றுதானே, அவர்களை உற்றுப்பார்த்தான்!

ஆ. லாசரு மரித்து நாலுநாள் கல்லறைக்குள் கிடந்தானே, அவ-னுக்கு எவ்வளவு விசுவாசம் இருந்திருக்கும்?

4. விஷயம் என்னவென்றால், இப்படிப் பட்டவர்கள் ஊரை ஏய்க்-கிறவர்கள்.

6. வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற அற்புத அடையாளங்-களுக்கும், நவீன கால அற்புத அடையாளங்களுக்கும் மிகத் தெளிவாகத் தெரிகிற வித்யாசம் அவைகளுடைய தரமே.

அ. இயேசுகிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் செய்த அற்புத அடையாளங்களும், எப்படிப்பட்டவைகளாக இருந்தன என்று சிலவற்றைப் பார்ப்போம்.

1. மரித்தோரை உயிரோடே எழுப்பினார்கள். செத்து நாலு நாட்களாகி கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டவர் களைக் கூட இயேசு எழுப்பினார்.

2. அவாகள் கொடிய விஷமுள்ள பாம்பால் தீண்டப்பட்டும் சேதம் அடையாமல் இருந்தார்கள்.

3. பலர் அறிய வியாதியாக இருந்தவர்களையும் உடல் ஊன முற்றோரையும் பொது மக்கள் பார்த்து ஆச்சரியப்படும் அளவுக்கு குணமாக்கினார்கள்.

4. அவர்கள் முன்பின் கற்றறியாத அந்நிய மொழிகளில் பேசி னார்கள். கேட்ட மக்களும் விளங்கிக் கொண்டார்கள், தங்களுடைய பாஷை என்று ஏற்றுக் கொண்டார்கள்,

5. இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டை எழுதி வெளி-யிட்டார்கள்.

ஆ. அவர்கள் செய்த அற்புத அடையாளங்களை அநேகமாயிரம் மக்கள் பார்த்தார்கள். யாரும் அவைகளின் தன்மைகளைச் சந்தேகிக்கவில்லை.

1. முதலாம் நூற்றாண்டில் இயேசு கிறிஸ்துவாலும் அவரு-டைய சீசர்களாலும் செய்யப்பட்ட அற்புத அடையாளங் களை அவர்களுடைய பரம விரோதிகள் கூட மறுத்துப் பேச முடியவில்லை.

2. அவர்கள் செய்த அற்புத அடையாளங்கள் பொய்யாக இருந் திருந்தால் அவர்களுடைய எதிரிகள் சுட்டிக்காட்டி பெரிது படுத்தி கேவலப்படுத்தியிருப்பார்களே!

3. ஆனால் அவர்கள் ஒரு போதும் அப்படிச் செய்ய முடிய வில்லை.

இ. இன்றைக்கு அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவி யின் வரம் எங்களுக்கும் உண்டு. என்று சொல்லுபவர்கள் அவர்களை செய்ததைப்போல செய்யும்படி சவால் விடுகிறோம்.

1. நம்பத் தகுந்த சாட்சிகளுக்கு முன்பாக மரித்துப் போன ஒரு நபரை உயிரோடெழுப்பட்டும்.

2. ஒருவனுக்கு விசுவாசம் இல்லை என்ற சாக்கில் நழுவ முயற்சிக்காமல் எலலாருக்கும் தெரிந்திருக்கிற, ஒரு தீர்க்க முடியாத வியாதியை உடனே சுகப்படுத்திக் காட்டட்டும்.

3. சாவுக்கேதுவான விஷத்தைக் குடிக்கட்டும், கொடிய விஷம் பாம்புகளால் கடிக்கப்பட்டு ஒரு சேதமும் உண்-டாகமல் இருக்கட்டும்.

4. அவர்கள் முன்பின் கற்றறியாத ஒரு புது மொழியில் பேசிக் காட்டட்டும்.

அ. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இப்படி அந்நிய பாஷை பேசுகிறோம் என்று கூறுகிற இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் எந்த நாட்டுக்குப் போகிறார்-களோ அந்த நாட்டு மொழியைக் கற்றுக் கொள்ள ஆசான் களை அமர்த்திக் கொள்கிறார்கள் அல்லது மொழி பெயர்ப்பாளர்களைப் பயன்படுத்துகிறார்கள் ஏன்?

ஆ. முதலாம் நூற்றாண்டில் போல் இவர்களும் அற்புத அடை யாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற்றி-ருந்தார்களானால் இந்தச் சிரமங்கள் தேவையில்லையே!''

5. முதலாம் நூற்றாண்டில் அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் பெற்ற அப்போஸ்தலர்களைப் போலவும், ஆவியினால் ஏவப்பட்ட பரிசுத்த மனிதர்களைப் போலவும் தேவனுடைய வார்த்தைகளை மேலும் மேலும் வெளிப்படுத்தலாமே.

d. இப்படியெல்லாம் இவர்கள் செய்வார்களானால் அப்பொழுது இவர்களுக்கும் அற்புத அடையாளங்கள் செய்யக்கூடிய பரிசுத்த ஆவியின் வரம் இருக்கிறது என்று நாம் தாராளமாய் ஏற்றுக் கொள்ளலாமே.

1. இவைகளை அவர்கள் செய்கிற வரையில் நாம் இவர்களுடைய கூற்றுகளை உண்மை என்று ஏற்றுக்கொள்ள முடியாது. தேவனுடைய வசனத்தின் படி அவர்கள் தேவனுக்கு விரோதமாக செயல்படுகிறர்கள் என்றுதான் சொல்லத் தோன்றுகிறது அது வீண் பெருமையாக இருக்கலாம் அறிமையாகஇருக்கலாம். அல்லது சுயநலமாகக் கூட இருக்கலாம். எதுவாயிருந்தாலும் தவறே.

IV. முடிவாக அற்புத அடையாளங்கள் செய்யக்கூடிய பரிசுத்த ஆவியின் வரம் தற்காலத்தில் கிடையாது என்று மூன்று வெவ்வோறு கோணத்தில் ஆய்வு செய்து பார்த்தோம்.

அ. முதலாவது முதலாம் நூற்றாண்டில் புதிய ஏற்பாட்டை வெளிப்படுத்தி உறுதி செய்யும் வரைக்கும் அற்புதஅடையாளங்கனள அனுமதித்த தேவன் தனது நோக்கம் நிறைவேறின பின்பு நிறுத்திக் கொண்டார்

ஆ இரண்டாவது: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தின் மூலமாகவும் அப்போஸ்தலர்கள் பிறர் மீது கை வைப்பதின் மூலமாகவும் அன்றி வேறு வழியில் அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியின் வரம் கிடையாது.

1. இந்த இரண்டு வழிகளும் இப்பொழுது அடைக்கப்பட்டுவிட்டது

2. ஆகையால் இந்த அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தை அடைவது சாத்தியமில்லை.

இ. மூன்றுவதாக முதலாம் நூற்றாண்டில் செய்யப்பட்ட அற்புத அடையாளங்களும் தற்காலத்தில் செய்யப்படுவதாகச்சொல்லப் படுகிறவைகளும் தரத்தில் மிகுந்த வேறுபாடு இருக்கிறது.

1. இன்றைக்கு இவர்களால் செய்வதெல்லாம் அற்புதம் என்ற சொல் விளக்கத்தின் வெளிச்சத்தில் பார்க்கும்போது **அற்புதமே அல்ல**

# செவித்தினவு

அப்போஸ்தலனாகிய பவுல் இளம் பிரசங்கியாகிய தீமோத்தேயு என்பவருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் கீழ்வரும் அறிவுரையை வழங்குகிறார். ''நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தோர்களையும் நியாயந் தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும் அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது.

சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்து கொண்டு புத்தி சொல்லு ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைக் பொறுக்க மனதில்லாமல், செவித் தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாய்ச் சேர்த்துக்கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்.

நீயோ, எல்லாவற்றிலும் மனத் தெளிவுள்ளவனாயிரு, தீங்கனுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய் உன் ஊழியத்தை நிறைவேற்று 2தீமோ 4:1-5.

எந்த சூழ்நிலையிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவற வேண்டாம் என்று திட்டமான கட்டளை கொடுத்தாலும், மக்களுடைய மன நிலைகளையும் அவர் அறிந்தே இருந்தார். மக்கள் செவித்தினவுள்ளவர்கள். புதிய புதிய விஷயங்களைக் கேட்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறபடியால் சத்தியத்தை விட கட்டுக்கதைகளே அவர்களுக்குப் பிடிக்கும் என்பதையும் அறிந்தே இருந்தார்.

அதே தீமோத்தேயுக்கு தனது முதலாம் நிருபத்தில் வேறொரு விஷயத்தையும் தெளிவுபடுத்துகிறார். ''ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி. பிற்காலங்களிலே மனச் சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்.

விவாகம் பண்ணாதிருக்கவும்

விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்-

தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர்கள் கட்டளையிடுவார்கள்.

தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது. ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக் கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளத் தக்கதல்ல.

அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும் என்று கூறுகிறார் (1தீமோ 4:1-5)

இங்கே மக்கள் ஒரு கால கட்டத்தில் மனிதர்களுடைய பொய்ப் போதகத்துக்கும், பிசாசின் வஞ்சனை நிறைந்த கள்ள உபதேசங்களுக்கும் செவி மடுத்து சத்தியத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று தீர்க்கதரிசனமாக உரைக்கிறார்.

மேலும், எபேசு பட்டணத்து மூப்பர்களோடு கலந்துரையாடும் போது "ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே சம்பாதித்த சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையும் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்.

நான் போனபின்பு, மந்தையைத் தப்ப விடாத கொடித்தான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.

உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.

ஆனபடியால், நான் மூன்று வருட காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டு வந்ததை நினைத்து விழித்திருங்கள்" என்கிறார் (அப் 20:28-31)

இந்தச் சந்தர்ப்பத்தில், அப்போஸ்தலனாகிய பவுல் உண்மை மனதோடு சத்தியத்தைப் போதித்ததாகவும் அதில் உறுதியாய் நிலைத்திருக்கும்படி சகோதரர்களை ஊக்குவித்தாலும், வருங்காலத்தில் என்ன நடைபெறும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டு கிறார். கள்ளப் போதகர்கள் சபைக்குள் ஊடுருவி, மந்தைக்குள் ஓநாய்கள் புகுந்து ஆடுகளைக் கவர்ந்து செல்வது போல், கர்த்தருடைய பிள்ளைகளை வஞ்சித்து தங்கள் வசமாக்கிக் கொள்வார்கள் என்றும், சபைக்குள்ளேயே சில சுயநலவாதிகள் தங்கள் சாகசப் பேச்சுகளால் விசுவாசிகளைக் கவர்ந்து இழுத்து சபையை பலவீனப்படுத்தி பிரிவினை உண்டாக்குவார்கள் என்றும் எச்சரிக்கிறார். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் ஒப்படைத்-

துள்ள பொறுப்பைக் குறித்து அசதியாய் இராமல் உஷாராயிருங்கள் என்று அறிவுரை கூறுகிறார். இன்னும் ஒரு சம்பவத்தைக் கூடப்பார்ப்போம்.

அப்போஸ்தலன் பவுல் அத்தேனே பட்டணத்தில் இருந்த போது, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர்கள் மத்தியில் உரை நிகழ்த்தினார். அப்பொழுது எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனோடே வாக்குவாதம் பண்ணினார்கள் சிலர் இந்த வாயாடி என்ன பேசப் போகிறான் என்றார்கள் சிலர். இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும், உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.

அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டு போய், நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று அறிய மனதாயிருக்கிறோம் என்றார்கள்.

அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும் நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை'' என்று வாசிக்கிறோம் (அப் 17:18-21)

இங்கேயும் கவனித்துப் பாருங்கள் அத்தேனே பட்டணத்தில் வாழ்கின்ற மக்களும், அங்கே வந்து தங்கியுள்ள அந்நியரும் பவுல் பிரசங்கத்தில் ஏதாவது புதுமையும் வித்தியாசமான நூதனமான செய்திகளும் இருக்குமா? என்று தான் எதிர்பார்த்தார்கள். மற்றபடி அவன் பேசுகிறது உண்மையா? அதினாலே நம்முடைய வாழ்க்கை எவ்வாறு சீரடையும் என்ற சிந்தனையெல்லாம் கிடையாது.

மேலே நாம் பார்த்த எல்லா வசனங்களையும் தொகுத்துச் சிந்தித்துப் பார்த்தால் ஒரு காரியம் தெளிவாகத் தெரிகிறது. விசுவாசிகளாயிருக்கட்டும் அல்லது அவிசுவாசியாகவே கூட இருக்கட்டும்.

தேவன் விளம்பின சத்தியங்களை அப்படியே கேட்டு ஏற்றுக் கொள்வதை விட நூதனமான, புல்லரிக்கும் மசாலா செய்திகள், மயிர்க் கூச்செரியும் திடீர் திருப்பங்கள் இப்படி ஏதாவது செவிக்குக் கிடைக்குமோ என்று தான் எதிர்ப்பார்க்கிறார்கள். இந்த மன நிலையைத்தான் வேதம் **செவித்தினவு** என்று கூறுகிறது. இயேசு கிறிஸ்து அடிக்கடி, ''காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்று கூறினாரே அதற்கு என்ன காரணம் என்றால் மக்களுடைய மனம் எதை நாடுகிறது என்று அவர் அறிந்திருந்த படியால் தான்.

நாம் சாப்பிடும் உணவுப்பொருள்களிலேயே நமக்கு வேண்டிய சத்துப்பொருள்களெல்லாம் இருக்கிறது. இருந்தாலும் அதற்குக் காரம் சேர்த்து, எண்ணெய் நெய் போன்றவைகளை, ஊற்றி வறுத்து, தாளித்து சுவையேற்றி இரசித்துச் சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்கொள்கிறோம். டாக்டரிடம் போனால் காரத்தைக் குறை புளியை அகற்று என்று அறிவுரை கூறுகிறார். இதே நிலை தான் சத்தியத்தைக் கேட்கிற விஷயத்திலும். அதாவது உண்மையை மட்டும் சொன்னால் அது அவர்களுக்குப் 'போர்' அடிக்கிறது. அந்த வெறுப்பை வெளிக்காட்ட சத்தியத்தின் தன்மையைப் பற்றிக் கேள்விகள் கேட்பது, சந்தேகப் படுவது ஆகிய தகாத காரியங்களில் ஈடுபடுகிறார்கள். தேவன் தமது அநந்த ஞானத்தால் விளம்பின பேருண்மைகளை விட சிறுமதி படைத்த மனிதன் கண்டு பிடிக்கிற சித்தாந்தங்கள், தத்துவங்களின் மீது நாட்டம் கொள்கிறார்கள்.

இந்த விபரீதமான போக்கு நமக்கு வியப்பைக் கொடுத்தாலும் இன்று மட்டுமில்லை, ஒவ்வொரு தலைமுறையிலுத் இதுவே நிலை.

மக்கள் குரங்கு மனம் படைத்தவர்கள். குரங்கு கிளைக்குக் கிளை தாவுவதைப் போல மனிதர்களும் ஒரு நாளைக்கு ஒரு கொள்கை, மறு நாளைக்கு வேறு கொள்கை என்று புதிது புதிதாக மாறிக் கொண்டேயிருக்கிறார்கள். அவைகள் தேவனுடைய சத்தியத்துக்கு முற்றிலும் முரண்பாடாக இருந்தாலும் தர்க்க நியாயத்துக்கு ஒத்துவராததாக இருந்தாலும் அவைகளையும் ஏற்றுக் கொள்ள ஒரு கூட்டம் இருந்தே இருக்கிறது.

கிறிஸ்துவின் சபையில் கூட வேதாகமம் கூறுகிற அடிப்படைச் சத்தியங்களையே கேட்டுக் கேட்டு சலிப்படைந்து விடுகிறார்கள். ஆகையால் எழுப்புதலான—ஆர்ப்பாட்டங்கள் நிறைந்த பிரசங்கங்கள் கேட்கத் 'துடிக்கிறார்கள். ஆகையால் வெளியூர்களிலிருந்து புதுப்புது பிரசங்கிமார்களை வரவழைத்து அவர்கள் மூலமாகக் கொஞ்சம் வித்தியாசமான செய்கைளைக் கேட்க முயலுகிறார்கள். அல்லது இதுவரை தாங்கள் கேட்டிராத புதிய புதிய தலைப்புகளில் பிரசங்கம் கேட்டால் பரவாயில்லை என்று நினைக்கிறார்கள்.

அப்படி அவர்கள் விரும்புவது அவர்கள் சத்தியத்தை ஆழமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக் கொண்டதை எடுத்துச் சென்று சத்தியம் கேட்காத மக்களுக்கு அறிவித்து அவர் ளையும் கிறிஸ்துவுக்குள் கொண்டு வர வேண்டும் என்ற ஆர்வத்தின் அல்ல; இப்படியாவது நம்முடைய செவிகளுக்குச் சில புதிய செய்திகள் கிடைத்து நம்முடைய செவித்தினவு அடங்காதா? என்ற

அற்ப ஆசையினால் தான். சகோதரர்களே, இந்த விபரீதமான போக்கு ஆபத்தானது. நம்மைஇரட்சிப்புக்குள் வழி நடத்திய தூய சத்தியமாகிய எருசலேமின்பழமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அக்கரையும் நம்பிக்கையும் குறையும் மனப்போக்கு நமக்கு ஏற்படுவது நாம் ஆவியில் பலவீன மடைகிறோம் என்பதற்கு அறிகுறி சரீரம் பலவீனம்அடைந்தால் நோய் எப்படித் தாக்குகிறதோ அதே போன்று நாம்ஆவியில் பலவீனமடையும் போது கள்ள போதகங்கள் எளிதாக உள் நுழைந்து விடும். அது நம்முடைய விசுவாசத்தில் ஓட்டைபோட்டு நாளடைவில் விசுவாசமாகிய கப்பலைக் கவிழ்த்துப் போடும்.

என் நண்பர்களே, சகோதரர்களே, வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு. வேதம் நமக்குக் கொடுக்கிற எச்சரிப்பை அசட்டை செய்யாதீர்கள். நமக்கு எது நல்லது என்பது கர்த்தருக்குத்தெரியும். சத்தியத்துக்கு மாற்றே கிடையாது. கர்த்தருடைய வசன ஆதார மில்லாத எந்தக் காரியத்தையும் உதறியெறிய ஏன் தயக்கம்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னதை நினைவுகூருங்கள். 'நானே-வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். (யோவான் 14:6)

J. C. சோட்

## தேவனின் கட்டளைகள் ஐந்து

நீதி :- 7:1-5

1. என்மகனே, நீ என் வார்த்தைகளைக் காத்து, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்து.
2. என் கட்டளைகளையும், என் போதகத்தையும் உன் கண்மணியைப் போல் காத்துக்கொள், அப்பொழுது பிழைப்பாய்.
3. அவைகளை உன் விரல்களில் கட்டி, அவைகளை உன் இருதய பலகையில் எழுதிக்கொள்.
4. இச்சக வார்த்தைகளைப் பேசும் அந்நிய பெண்ணாகிய பரஸ்திரீக்கு உன்னை விலக்கி காப்பதற்காக.
5. ஞானத்தை நோக்கி, நீ என் சகோதரி என்றும், புத்தியைப் பார்த்து, நீ என் இனத்தாள் என்றும் சொல்வாயாக.

# வேதாகமத்தைப் பற்றிய உண்மைகள்

வேதாகமம் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட ஒரு அற்புதமான நூல்.

1. ''வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது''

-2தீமோ 3:16

2. ''தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனிதருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை; தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள்.''

-2பேதுரு 1:21

3. ''பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கத்தரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்..''

-எபி 1:1-2

4. ''நாங்கள் மனித ஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி ..''

- 1கொரி 2:13

❋ வேதாகமமானது அரசன் முதல் சாமான்யன் வரை பல தரப்பட்ட வாழ்க்கை தரத்திலிருந்து வந்த 40 வித்தியாசமான நபர்களால் 1600 வருட இடைவெளியில் எழுதப்பட்டது. இக்காலகட்டத்தில் பல புதிய கண்டுபிடிப்புகள் தோன்றின; ஆட்சிகளும் நாகரீகங்களும் தோன்றி, மறைந்து மாறின என்ற போதிலும் வேதாகமத்தின் பரிசுத்தமான பக்கங்களில் எவ்வித விஞ்ஞான அல்லது சரித்திர முரண்பாடுகளையோ காண முடியவில்லை. மாறாக வியக்கத்தக்க ஒற்றுமையைக் காண்கிறோம்.

புதிய, பழைய ஏற்பாடுகளுக்கிடையே உள்ள ஒற்றுமைக்கான சில காரியங்களைப் பாருங்கள்.

### பழைய ஏற்பாடு

அ. படைப்பு — ஆதியாகமம் 1,2 அதிகாரங்கள்

ஆ. கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கத்தரிசனங்கள் — ஏசாயா 53-ம் அதிகாரம்,

இ. நன்னடத்தைச் சட்டங்கள் — யாத்திராகமம் 20:12-7

ஈ. விக்கிரகங்களையும், சொருபங்களையும் ஆராதிப்பதையும், வழிபடுவதையும் கண்டித்தல் — யாத்திராகமம் 20:3-5

## புதிய ஏற்பாடு

அ. படைப்பு — யோவான் 1:1-3! எபிரேயர் 1:1-2

ஆ. கிறிஸ்துபற்றிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுதல் - அப் 8:35

இ. நன்னடத்தைச் சட்டங்கள் - எபே 6:2; மத் 5:21,22; 31-22; எபே 5:25; மத் 15:19; எபே 5:3

ஈ. விக்கிரகங்களையும், சொருபங்களையும் ஆராதிப்பதையும் வழி படுவதையும் கண்டித்தல் ரோமர் 1:22-25

- வேதாகமத்தின் மூலமொழிகள் எபிரேயம், கிரேக்கம் மற்றும் அராமியம்.
- பழைய ஏற்பாடு எழுதப்பட்டு கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் இடை வெளிக்குப் பின் புதிய ஏற்பாடு எழுதப்பட்டது.
- வேதாகமம் உலகில் அதிக விற்பனையாகும் புத்தகங்களில் முதலிடம் வகிக்கிறது.
- முதல் முதல் அச்சிடப்பட்ட புத்தகம் என்ற பெருமைக்குரியது.
- ஆரம்பத்தில் அதிகாரங்களாகவும், வசனங்களாகவும் பிரிக்கப்படாதிருந்தது; பின்னர் படிக்க எளிதாக இருக்க அவ்வாறு பிரிக்கப்பட்டது. கி.பி 1250ல் கர்தினால் யூகோவால் புதிய ஏற்பாடு அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டது. பின்னர் கி. பி. 1551ல் சர் ராபர்ட் ஸ்டீபன்ஸ் என்பவரால் முதல் முதலாக வசனங்களாகப் பிரிக்கப்பட்டது.

**மனிதனின் இரட்சிப்பின் திட்டத்தை தொடர்ந்து வெளிப் படுத்துகிறது வேதாகமம்,**

1. ''உனக்கும் ஸ்தீரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் (கிறிஸ்து) உன் தலையை நசுக்குவார்; நீ (சாத்தான்) அவர் குதிங்காலை நசுக்குவாய்'' - ஆதி. 3:15
2. ''அப்படியானால், நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? வாக்குத்தத்தங்களைப் பெற்ற சந்ததி (கிறிஸ்து-வசனம் 16) வருமளவும் அது அக்கிரமங்களினிமித்தமாகக் கூட்டப்பட்டு ....'' - கலா. 3:19
3. ''.... கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தை புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக ...... கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின் படியே .... இந்த கிருமை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.'' — எபே 3:8-11.

**வேதாகமத்தைப் பகுத்துப் படிக்க வேண்டும்.**

1. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என வேதாகமம் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

2. புதிய ஏற்பாட்டில் 27ம், பழைய ஏற்பாட்டில் 39ம் ஆக மொத்தம் 66 புத்தகங்கள் வேதாகமத்தில் உள்ளன.

3. ஒவ்வொன்றுக்கும் தனிப்பட்ட சட்ட முறைகளைக் கொண்ட மூன்று கால கட்டங்களை தன்னுள் அடக்கியுள்ளது வேதாகமம்.

அ. பிதாக்களின் காலம் - படைப்பில் ஆரம்பித்து சீனாய் மலையில் முடிகிறது. (கி.மு. 1500).

ஆ. மோசேயின் காலம் - சீனாய் மலையில் (கி.மு. 1500) தொடங்கி கிறிஸ்துவின் சிலுவை மரணம் வரை. (கி.பி.33)

இ. கிறிஸ்தவர்களின் காலம் - கிறிஸ்துவின் மரணத்தில் தொடங்கி (கி.பி. 33) நியாயத்தீர்ப்பும் உலக அழிவும் ஏற்படும் வரை.

4. ஒரு காரியத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு குறிப்பிட்ட வசனத்தை மட்டும் எடுத்துக் கொண்டு முடிவு செய்யக்கூடாது. மாறாக, ஒரு வசனத்தின் தொடர்பான வசனங்களையும் இணைத்து அர்த்தம் காண வேண்டும்.

5. குறிப்பிட்ட வசனத்தை, ''யார் பேசுகிறார்?, ''யாரிடம் பேசுகிறார்?,'' ''எதைப்பற்றி பேசுகிறார்?,'' ''ஏன் பேசுகிறார்?'' என ஆராய்ந்து சரியான முடிவுக்கு வரவேண்டும்.

6. விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் ஏற்ற சட்டங்களாக, மக்களை பழைய ஏற்பாட்டுச் சட்டங்கள் கட்டுப்படுத்தாது.

அ. ''நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை (பழைய ஏற்பாட்டைக்) குலைத்து, அதை நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து.'' — கொலோ. 2:14,

ஆ. ''இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில், இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்தும் காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப் போல இது இருப்பதில்லை. புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதை (மோசே மூலம் கொடுத்ததை) பழமையாக்கினார். பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபத்திருக்கிறது.'' — எபி. 8:13.

இ. ''ஆதலால் விசுவாசம் வருகிறதற்கு முன்பே, வெளிப்படப் போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப் பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப்பட்டி-

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Frid ys - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:15 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Sturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

வாசக அன்பர்களே!

தயவுகூர்ந்து உங்களுக்கு இதழ் ஒழுங்காக வராவிட்டால் உடனே தொடர்பு கொள்ளுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களை விலாசம் கொடுக்கும்படி ஊக்குவியுங்கள். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவியுங்கள். முகவரியைப் பின்கோடு உட்பட வீட்டு எண், தெரு அல்லது பாதையின் பெயர், மாவட்டம் உட்பட தெளிவாக எழுதி ஒத்துழையுங்கள்.

ஆசிரியர்

---

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER · BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 002.